## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## SC.No.37/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 23 | நாள் | : | 20.03.2025 |
| பெயர் | : | டாக்டர் கிருஷ்ணவேணி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 20th day of March 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அரசு மருத்துவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். கடந்த 10.09.2019 ம் தேதியன்று நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்தபோது மதியம் 12.30 மணியளவில் சிவகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தை சிவகிரி காவல் நிலைய முதல் நிலை பெண் காவலர் சேது லட்சுமி என்பவர் என்னிடம் கொண்டு வந்தார். அந்த கடிதத்தில் 09.09.2019 அன்று பணி மருத்துவர் அன்னராஜ் என்பவரால் பிண அறையில் வைக்கப்பட்ட இறந்துபோன கோவிலூர் பிள்ளையார்கோவில் தெருவைச் சார்ந்த பரமசிவன் என்பவரது மகள் இரண்டு வயது கவினா என்ற பெண் குழந்தையின்

பிரேதத்தை பிண ஆய்வு செய்து தரும்படி கேட்கப்பட்டிருந்தது. வழக்கின் சரித்திரத்தின்படி பிரேத பரிசோதனை சிறப்பு தடயவியல் மருத்துவர்களால் செய்யவேண்டிய அவசியம் கருதி பிரேத பரிசோதனைக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

சங்கரன்கோவில் மருத்துவமனையில் சடலக்கூராய்வு செய்ய வசதி உள்ளது. சடலக்கூராய்விற்கான விண்ணபத்துடன் வழக்கின் சரித்திரம் வழங்கப்படும் என்றால் சரிதான். வழக்கின் சரித்திரத்தின் அடிப்படையில் நாங்கள் முடிவெடுப்போம். வழக்கி சரித்திரத்தின் அடிப்படையில் நான் முடிவெடுத்து சடலக்கூராய்விற்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் அதுபோன்ற வேண்டுகோள் எதையும் கொடுக்கவில்லை. பொதுவாக வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டால் அதை எங்கே வைத்து சடலக்கூராய்வு மேற்கொள்வது என்று முடிவு செய்வோம் சட்டம் சார்ந்த தடய அறிவியல் துறையின் உதவியுடன் நடத்தப்படவேண்டும் என்று முடிவு செய்தால் அதை அத்தகைய வசதி கொண்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைப்போம். சடலக்கூராய்வு செய்தபின்னர்தான் அத்தகைய முடிவுக்கு வரமுடியும் என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும் இவ்வழக்கில்

சங்கரன்கோவில் மருத்துவமனையில் சடலக்கூராய்வு செய்யப்படவில்லை என்பதற்காக நான் 10ம் தேதி சடலத்தை பார்த்து திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பரிந்துரைக்கும் முன்பாக சடலத்தை பார்த்தேன். போலீசார் வேண்டுகோளின்பேரில் நான் சடலக்கூராய்வு மேற்கொள்ளாமல் திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. போலீசார் குழந்தையின் உதட்டின் காயத்தை குறிப்பிடும்படி சொன்னார்கள் என்றும் நான் அதற்கு மறுத்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. போலீசார் இறப்பில் சந்தேகம் இருப்பதாக என்னிடம் கூறவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.20 17:23:23 +0530